1992 மார்ச் 26]

எடுக்கும் என்கிற காரணத்தினால் அதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, எல்லா யோசனைகளையும் மனதிலே வைத்துக்கொண்டு இந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வை காண்பதற்கு அரசு நிச்சயமாக முடிவெடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திர சேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் நீர்ப்பாசனத்திற்காக 4-வது மண்டலம் கொண்டு வருகின்ற திட்டத்தை இங்கே அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப்படி 4-வது மண்டலம் கொண்டு வருகிற நேரத்திலே புதிதாக நிலத்தை ஆயக் கட்டிலே சேர்க்கின்ற எண்ணம் அரசுக்கு உள்ளதா? புதிய வாய்க்கால்கள் வெட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே வெட்டப்பட்ட வாய்க்கால்களுக்கு இந்தத் தண்ணீர் விடுவதுபற்றி நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். ஏற்கனவே வெட்டப்பட்ட வாய்க்கால் களுக்கு, ஏறத்தாழ 1 லட்சத்து 75 ஆயிரம் ஏக்கர்களுக்கு தண்ணீர் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, புதிதாக வாய்க்கால்கள் வெட்டுவதுபற்றி எந்த பரிசீலனையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 367. திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

367—

மின்சாரத் தடை பற்றி தெரிவிக்க தொலைபேசி வசதி

*4557—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) சென்னையில் மின்சாரத் தடை பற்றி தகவல் தருவதற்கு வசதியாக அவ்வலுவலகங்களுக்கு பல தொலைபேசி நீட்சிகள் (exten:ion) வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சென்னையில் மின்சாரத் தடை பற்றி தகவல் தருவதற்கு தனித் தனி தொலைபேசி ...ட்சிகள் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன, சென்னையில் மின்சாரத் தடை பற்றி தகவல் தருவதற்கு வசதியாக 44 மின்சார தடை நீட்சி மையங்கள் தனித் தனி தொலைபேசி வசதியுடன் இயங்குகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்தவரையில் மின் தடங்கல் ஏற்படுகின்ற நேரத்தில் அதைப்பற்றித் தெரிவிக்கவேண்டுமென்றால், சென்னை அண்ணா சாலையில் உள்ள தலைமை நிலையத்தில் சி.பி.டி. என்ற பிரிவும், ஒவ்வொரு ஏரியா அலுவலகத்திலும் ஒரு FOC பிரிவும் உள்ளன, ஆனால் மாலை நேரங்களில் சென்னை நகரத்தில் மின் தடங்கல் ஏற்படுவதால் அந்த ஒவ்வொரு FOC பிரிவையும் இரண்டு பிரிவாகப் பிரித்து கூடுதலாக ஆட்களை நியமித்து தொலைபேசியை வழங்கி இணைப்பை அரசு தருமா என்று அறிய விரும்புகிறேன்,

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சென்னையைப் பொறுத்தமட்டில் 3 பகிர்மான வட்டங்களாகப் பிரித்து, தென் சென்னையிலே, 17 தனி தொலைபேசிகளும், வட சென்னையிலே 11 தனி தொலைபேசிகளும், மத்திய சென்னையிலே 16 தனி தொலைபேசிகளும் உள்ளன. இதுதவிர 44 மின்சார தடை நீக்கி மையங்கள், ப்யூஸ் ஆஃப் கால் சென்டர்ஸ் என்று சொல்லப்படுகிற தனித் தனி தொலைபேசி வசதிகள் இருக்கக்கூடிய நிலையங்கள் இருக்கின்றன, இது தவிர, வி.எச்.எஃப். என்று சொல்லப்படுகிற ஒயர்லஸ் கருவிகள் பொறுத்தப்பட்ட அலுவலகம் 832295 என்ற தொலைபேசி எண்ணுடன் செயல்படுகிறது. வி.எச்.எஃப். ஒயர்லஸ் வசதியுடன் இணைக்கப்பட்ட ஒரு நிலையம் இயங்கிக் கொண்டிருக்கிறது. என்னுடைய வாகனத்தில்கூட அந்த ஒயர்லஸ் பொருத்தப்பட்டு என்னுடைய கவனத்திற்கு ஒயர்லஸ்மூலம் வரும் செய்திகளை நானே கேட்டு, எந்தப் பகுதியில் மின்தடை ஏற்பட்டிருக்கிறதோ, அங்கே நடவடிக்கை எடுக்க உடனுக்குடன் உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன. இன்றைக்கு ஒப்பற்ற தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய காலத்திலேதான் மின் தடையை நீக்க புதிய நடைமுறைகளை எல்லாம் கொண்டுவந்து, நடவடிக்கை எடுக்கப்பட்டு, உடனுக்குடன் மின் தடைகள் நீக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், (மேசையைத் தட்டும் ஒலி).